A-T-5

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5 00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2202 கார்த்திகை 02 திங்கட்கிழமை [18-11-1991] UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 349

மங்கள முனசிங்காவும் யாழ் வருவதற்கு முயற்சி!

தெரிவுக்குழுத் தலைவர் என்ற முறையில் புலிகளின் கருத்தை அறிய விரும்புகிறார்

கொழும்பு, நவம்பர் 18

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளைக் கண்டறிய நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பியுமான திரு. மங்கள முனசிங்க யாழ்ப்பாணம் வர முயற்சி எடுத்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தெரிவுக்குழுவின் தலைவர் என்ற முறையில்—

இனப்பிரச்சினையில் முக்கிய தரப்புச் சம்பந்தப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகளின் கருத்தை தாம் அறிய விரும்புவதாக அவர் குறிப்பிட்டார் என்று கொழும்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தெரிவுக்குழுவின் முயற்சி வெற்றியளிப்பதற்கு விடுதலைப் புலிகள் தரப்புக் கருத்தை அறிந்து கொள்வது முக்கியமானது என்று அவர் கருதுவதாகவும் அறியவருகிறது.

யாழ்ப்பாணம் வருவதற்காக அவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டாரா என்பதை உறுதி செய்ய முடியவில்லை.

வடக்கு - கிழக்கு நிவாரணப் பணிகள் குறித்து ஆராய்வதற்காக கனடா தலைநகர் ஒட்டாவாவில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

தென் தமிழீழ அவலங்களை சித்திரிக்கும் கண்காட்சி

மாவீரர் வாரத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம், நவ: 18

மாவீரர் வாரத்தில் தென் தமிழீழத்தில் நடக்கும் இராணுவ அட்டூழியங்களைச் சித்திரிக்கும் சித்திரக் கண்காட்சி ஒன்று நடைபெற உள்ளது.

கடந்த பல வருடங்களாக இராணுவத்தினரும் மற்றும் அரசாங்கப் படைகளும் தென் தமிழீழத்தில் புரிந்த அனர்த்தங்களால் ஏற்பட்ட விளைவுகளைப் பிரதிபலிக்கும் நெஞ்சை உருக்கும் சித்திரங்கள் இக்கண்காட்சியில் முக்கிய இடம் பிடிக்கும்.

பிரஸ்தாப சித்திரக் கண்காட்சி மாவீரர் ஆரம்ப தினமான 21 ஆம் திகதி தொடக்கம் இறுதி நாளான 27 ஆம் திகதி வரை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

சித்திரக் கண்காட்சியின் சிறப்பு நிகழ்ச்சியாக எதிர்வரும் 23 ஆம் திகதி தென் தமிழீழ மக்களின் வாழ்க்கை அவலங்களை எடுத்துக் காட்டும் கலை நிகழ்வு இடம்பெறும். மேடையேற்றப்படும் கலை நிகழ்வுகள் தென் தமிழீழ மண் வாசனை வீசுவனவாக இருக்கும். [அ]

இரு தாய்லாந்து வாசிகளும் விடுதலை செய்யப்பட்டனர்!

கொழும்பு, நவ 18

மட்டக்களப்பு மாவட்டம் புனாணைப் பகுதியில் வைத்து கடந்த புதன்கிழமை விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாய்லாந்து வாசிகளான இரு பொறியியலாளர்களும் நேற்று முன்தினம் பொலன்னறுவையில் வைத்து விடுவிக்கப்பட்டனர்.

இருவரையும் விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைத்தனர் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

தாய்லாந்து வாசிகளுடன் சேர்த்துக் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் — சிங்களவர்களான — மற்றைய இரு பொறியியலாளர்களும் என்னவானார்கள் என்பது குறித்து தகவல் ஏதும் தெரியவரவில்லை (உ-த)

இரு அகதி முகாம்கள் படையினரால் முற்றுகை!

28 அப்பாவித் தமிழர் கைதாகினர்

கிழக்கில் கல்முனை, காரைதீவு அகதி முகாம்கள் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் சுற்றி வளைக்கப்பட்டு, அங்கிருந்து 28 பேர் கைது செய்யப்பட்டனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

கல்முனை பாத்திமா கல்லூரி அகதி முகாமிலிருந்து 26 பேரும், காரைதீவு முகாமிலிருந்து இருவரும் கைதாகினர்.

அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்ட இவர்களில் அனேகர் மாணவர்களும், ஊழியர்களும் ஆவர். [ஓ-3]

செஞ்சிலுவைக் குழுவினர் விரைவில் தீவகம் செல்வர்

யாழ்ப்பாணம், நவ. 17

தீவுப் பகுதியில் சிக்கியுள்ள மக்களின் நலன்கள் பற்றி அறிந்துகொள்வதற்கு, செஞ்சிலுவைச் சங்கக் குழு ஒன்று நாளை மறுதினம் அளவில் அங்கு செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அறிய வருகிறது.

கடந்த 15 ஆம் திகதியே இந்தக் குழு அங்கு செல்லும் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் குழுவில் இடம்பெற வேண்டிய — செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு முக்கிய அதிகாரி ஒருவர் — கொழும்பு சென்றதால் குழுவின் பயணம் தள்ளிப் போடப்பட்டது.

அந்த அதிகாரி அனேகமாக நாளை கொழும்பில் இருந்து திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர் வந்து சேர்ந்ததும் செஞ்சிலுவைக் குழு தீவுப் பகுதிக்குச் செல்லும். (உ-3-5)

விமானக் குண்டு வீசியே கப்பலைப் பிடித்தோம்!

தமிழக அதிகாரி தகவல்

சென்னை, நவ. 18

""பாண்டிச்சேரியின் காரைக்கால் கடல் பகுதியில் இந்திய டார்ஜினர் விமானம் ஒன்று குண்டுத் தாக்குதல் நடத்தியே ஈழத் தமிழர்கள் பயணம் செய்த கப்பலைக் கைப்பற்ற முடிந்தது'' — தமிழ்நாடு பாதுகாப்புத் துறை அதிகாரி ஒருவர் இப்படித் தெரிவித்தார்.

கப்பல் கண்டுபிடிக்கப்பட்டவுடன் அது தப்பி ஓடிச் சென்றுவிடாதவாறு [illegible] கப்பலைச் சூழ குண்டுத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



பரீட்சைக் காலத்திலை பரீட்சார்த்தம் பாக்கப் போகினம் போலை...!

500 படையினர் கால் இழப்பு!

லண்டன், நவ. 18

கடந்த வருடம் ஜூன் மாதம் புலிகள்—இராணுவ மோதல் ஆரம்பித்த பின்னர் சுமார் ஐநூறு படையினர் ஜொனி' மிதிவெடிகளில் சிக்கி தமது கால்களை இழந்திருப்பதாக பி பி ஸி. தெரிவித்தது.

இவர்களில் கணிசமானோர் தமது இரண்டு கால்களையும் இழந்துள்ளனராம்.

யுத்தம் ஆரம்பித்த பின் இதுவரை சுமார் 12 ஆயிரம் பேர் உயிரிழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

ஷெல் தாக்குதல்

தென்மராட்சி, நவ 18

ஆனையிறவு முகாமில் இருந்து நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் ஷெல் வீச்சும், துப்பாக்கிப் பிரயோகமும் நடத்தப்பட்டன.

இதேசமயம்—

காரைநகர் படையினர் நேற்று மாலை 5-30 மணிக்கு பொன்னாலை கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதலை நடத்தினர்.

பொன்னாலை வருத்திப் பிட்டி மயானத்தில் ஷெல்கள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117-15)

கொக்குவிலில் இளைஞன் பலி

கொக்குவில், நவ. 18

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவில் கேணியில் நண்பர்களுடன் நீந்தி விளையாடிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர், மூச்சுத் திணறி மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த [illegible] (17 வயது) என்பவரே மரணமானவர் ஆவார்.

ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும்!

யாழ். கல்விப் பணிப்பாளர் கொழும்பில் தகவல்

1990 டிசம்பர், 1991 டிசம்பருக்குரிய ஜி. சீ. ஈ. (சாதாரணதரப்) பரீட்சையை வடக்கில் நடத்த முழு ஏற்பாடுகளும் கொழும்பில் செய்யப்பட்டுவிட்டன

வட பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் கொழும்பில் வைத்து இத்தகவலை உதயனுக்கு வெளியிட்டார்.

""பரீட்சை ஏற்பாடுகள் குறித்து கொழும்பில் பரீட்சை ஆணையாளருடனும், கல்வியமைச்சு அதிகாரிகளுடனும் பேச்சு நடத்தி பரீட்சைக்கான சகல வேலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

பரீட்சை நடைபெறுவதற்கு வசதியாக யுத்த நிறுத்தம்?

கொழும்பு, நவ 18

வடக்கு - கிழக்கில் இம்முறையாவது ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சை தடைப்படாமல் நடைபெறும் பொருட்டு டிசம்பர் இரண்டாவது வாரத்தில் இருந்து அரசாங்கம் இராணுவ நடவடிக்கைகளை முற்றாக நிறுத்தி வைக்கும் என்று நம்பப்படுகிறது.

இதற்கான முயற்சிகளை பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த டிசம்பர் மாதத்தில் ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சை நடத்துவதற்கு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும். இராணுவ நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டிருந்ததால் பரீட்சையை [illegible] வேண்டியதாயிற்று!

இந்நிலை இம்முறையும் ஏற்படாமல் தவிர்க்க கொழும்பில் பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் முயல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்தே பரீட்சைக் காலத்தில் அரசாங்கத் தரப்பில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தச் செய்வதில் அவர்கள் ஈடுபட்டு வருவதாக அறியப்படுகிறது. [அ-3]

நரசிம்மராவ், சரத்பவார் பெரு வெற்றியீட்டினர்

புதுடில்லி, நவ 18

ஆந்திரப் பிரதேசம் நந்தியால் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் 5 லட்சத்து 80 ஆயிரத்து 297 அதிகப்படி வாக்குகளைப் பெற்று பாரதீய ஜனதாக் கட்சி வேட்பாளர் பங்காரு லக்ஷ்மணைத் தோற்கடித்தார்.

மகாராஷ்டிர மாநிலம் பாராமதி தொகுதியில் இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் 5 லட்சத்து 6 ஆயிரத்து 318 வாக்குகள் பெற்று பாரதீய ஜனதாக்கட்சி வேட்பாளர் டாக்டர் பிரதிபா லேலாண்டேயைத் தோற்கடித்தார்.

இடைத் தேர்தல் நடைபெற்ற 15 தொகுதிகளில் 11இல் நேற்று வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பமானது.

நந்தியால, பாராமதி தொகுதிகளில் வெற்றியீட்டிய இந்திரா காங்கிரஸ்கட்சி,

(4 ஆம் பக்கம் பார்க்க)

சின்னஞ்சிறு விளம்பரம்

ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும் பியூட்டர், 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம்.

[இ-0798]

தவறிவிட்டது

13 - 11 - 1991 காலை மானிப்பாய்க்கும், ஆறுகால் மடத்திற்கும் இடையில் கைக்கடிகாரம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 20, சென். பீற்றேர்ஸ் லேன், [ஆஸ்பத்திரி வீதி] யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [18815]

---

31 ஆவது நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
26
—
04
—
1960

மறைவு:
19
—
10
—
1991

திருமதி

வேணுகாதேவி பஞ்சலிங்கம்

கற்றோர் புகழ்பிரசோற் பத்திலைப் பசிபிரண்டில்
உற்றசனியே சாதகியோ டுறவாட - நற்றவத்து
உத்தமியாம் வேணுகா தேவியென்கின்ற உலகுபுகழ்
வித்தகியும் போந்தாளே விண்.

தங்கள் பிரிவால் வாடும்:

கணவன், மகள், தாய், தகப்பன், சகோதரர்கள், மைத்துனிமார் மற்றும் உற்றார், உறவினர்கள், சுற்றத்தார்.

58, சீனிவாசகம் வீதி,
கொட்டடி யாழ்ப்பாணம்.

சேரதீவு வீதி,
நாவற்குழி.

[18812]

4ஆவது ஆண்டு நினைவஞ்சலி

ஆண்டவன் படைப்பு:
24
—
07
—
1946

அநியாய அழிப்பு:
18
—
11
—
1987

அமரர்

கனகையா ஆனந்தராசா

[ஆங்கில ஆசிரியர் - கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், 2 ஆம் வருட மாணவர், 1987 யா/பல்கலைக்கழகம்]

முல்லை மண்ணில் முகிழ்ந்தவனே
தொல்லை பல சூழ்ந்த எம் மண்ணில்
கல்விமானாய், அறிஞனாகி
எல்லையில்லா மாணிக்கமாய் - ஒளிர்ந்த
எம் ராசா, ஆனந்தராசாவே!
கயவர்களின் கரங்களிலே
உன் உயிர் போய் நாலாண்டானதையா!
உம் நினைவால் தினந் தினமும்
உருகியே நாம் வாடுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும்;

பெற்றோர், மனைவி, சகோதர, சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள்.

குமுழமுனை,
முள்ளியவளை.

[18809]

வங்கி ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும்

கொழும்பு, நவ. 18

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் ஊழியர்களது சம்பள அளவுத் திட்டம் புதுப்பிக்கப்பட உள்ளது.

இது சம்பந்தமாக பிரஸ்தாப வங்கிகளின் நிர்வாகங்கள் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்துடன் ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளது.

தரம் III வகுப்பு 2 வரையான தரங்களில் உள்ள ஊழியர்களின் சம்பள விகிதங்களைப் புதுப்பிக்க இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஒவ்வொன்றுக்கும் 2 ரூபா 75 சதம் வீதம் அலவன்ஸ், அடிப்படைச் சம்பளத்தின் 20 வீதத்துக்குச் சமமான வாடகை அலவன்ஸ், விசேட வாழ்க்கைப் படியாக 140 ரூபா, வாழ்க்கைப் படியாக 70 ரூபா, திருமணப் படியாக 100 ரூபா என்பன ஊழியரின் அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கவும் ஒப்பந்தம் வகை செய்கிறது.

இந்த மாற்றங்கள் இவ்வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து அமுலுக்கு வந்ததாகக் கருதப்படும்- [அ]

முக்கிய நபர் தப்பிவிட்டாராம்!

சென்னை, நவ. 18

கடந்த ஆண்டு ஜூன் மாதம் பத்மநாபாவும் மற்றும் 14 பேரும் கொலை செய்யப்பட்டது தொடர்பாகத் தேடப்பட்டு வந்த சிவசன் என்பவர் திருநெல்வேலியில் கைதாவதில் இருந்து தப்பிவிட்டார் என்று தமிழ்நாடு பொலீஸார் தெரிவித்தனர்.

தப்பிச் சென்ற சிவசன், சயனைட் உட்கொண்டு உயிரிழந்த சிவராசனின் நெருங்கிய சகா என்றும், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-இ]

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வக்குமார் சின்னக்குமார்

அன்னை மடியில் :
06 - 06 - 1947

ஆண்டவன் அடியில் :
18 - 11 - 1989

அப்பனே, இன்பனே! மகனே வாட்டுதையா உம் பிரிவு எம்மையெல்லாம்! காட்டுமையா எமக்கு வழி அங்கிருந்து! அன்புத் தந்தையே, ஆசை மைந்தனே, அருமைச் சகோதரா, இனிய மைத்துனா, அலைச் செல்வனே, சின்னக் குமரனே ஆண்டு இரண்டு ஆனாலும் உன் அன்பு முகம் மாறாது. மீண்டும் பூசை செய்தாலும் கண்ணீர் ஆறுமோ! ஆத்ம சாந்தி காண வேண்டும்.

சாந்தி வேண்டும் :

மகள்மார், தாய், தந்தை, சகோதரர், மச்சான்மார், மச்சாள்மார்.

15/1, 2 ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

[18767]

மரண அறிவித்தல்

பொன்னையா செல்லத்துரை

கொக்குவில் மேற்கு, பொன்னையா வீதியைச் சேர்ந்த T.P. செல்லத்துரை [16-11-91] நேற்று முன்தினம் காலமானார்.

இவர் கனகம்மா [U. K.] வின் அன்புக் கணவரும், சரோஜினிதேவி, கமலதேவி (U. K.), விஜயதேவி [Canada] ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. M. பத்மநாபன் [விரிவுரையாளர், யாழ் மருத்துவபீடம்], V. விஜயானந்தா [பொறியியலாளர் U. K.], K. குவேந்திரன் [Canada] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நவரட்ணம் [சட்டத்தரணி], காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி விஜயரத்தினம் மற்றும் திருமதி தவரத்தினம், ராசையாவின் சகோதரரும், பிரதீதா, பிருந்தாபன், துஸ்யந்தன், சுரேன் [U. K], சஞ்சே [U. K.], சுரேஸ் [U. K.], மயூரன் [Canada], மயூரி [Canada] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் [17-11-91] நேற்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. M. பத்மநாபன்

[18768]

மரண அறிவித்தல்கள்

தனலெட்சுமி சுப்பிரமணியம் (இராசமணி)

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதி, கொட்டடியைச் சேர்ந்த காலஞ்சென்ற க. சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவி தனலெட்சுமி (இராசமணி) 17-11-1991இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பாக்கியம் தம்பதிகளின் மகளும், திரு சுந்தரராசா [கனடா], திரு. தியாகராசா [பிரான்ஸ்], திருமதி கி. கமலேஸ்வரி [கனடா], திரு ஸ்ரீஸ்கந்தராசா, திருமதி க. லதாமாலினி [ஜேர்மனி], திரு. மோகனராசா [கனடா], திருமதி த. சுமதி, திருமதி லோ. சசிகலா [கனடா] ஆகியோரின் தாயாரும், திருமதி க. யோகராணி [கனடா], திருமதி தி. ரஜனி [பிரான்ஸ்], திரு. கிருஷ்ணானந்தமூர்த்தி [கனடா], திருமதி சி. பிறேமளா, திரு. பொ. கமலாகரன் [ஜேர்மனி], திரு. நா. தவராஜன் [தவம்], திரு. லோகநாதசிங்கம் [கனடா] ஆகியோரின் மாமியும், திருமதி நாகராசா கனகம்மா அவர்களின் அன்புச் சகோதரியும், திருமதி நளாயினி ஜெகதீஸ்வரனின் [கொழும்பு] பெரியதாயும், செல்வி க. விஜயதாரணி [வேம்படி மகளிர் கல்லூரி], செல்வி க. நிருபினி [ஜேர்மனி], செல்வி க. ஜனனி [ஜேர்மனி], செல்வன் ஜெயரூபன், செல்வி அபிலாசினி [கொழும்பு], கி. பிரசாத் [கனடா], செல்வி கி. கார்த்திகா [கனடா], செல்வி தி. மீரா [பிரான்ஸ்], செல்வன் தி. ஹரி [பிரான்ஸ்] ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-11-1991 திங்கட்கிழமை [இன்று] காலை 10.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

நா. தவராஜன் [தவம்]
[மருமகன்]

[18814]

முருகேசு இராசு

நல்லூரைச் சேர்ந்த முருகேசு இராசு 17-11-91இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - கதிராசி தம்பதியரின் மகனும், பரஞ்சோதியின் அன்புக் கணவரும், இரவீந்திரராஜா [காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன - வேலைக்களம்], ரவிச்சந்திரிகா [லண்டன்], சரச்சந்திரபோஸ், காந்திமதி, சோமதி, ஸ்ரீஹரன் [லண்டன்], வளர்மதி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கி. ஜெயராசா, இ. ரேவதி ஆகியோரின் மாமனாரும், மார்க்கண்டு, இரத்தினம் [கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை], கனகம்மா ஆகியோரின் சகோதரரும், தமிழினி, ஜோன்சன், சுவேதிகா ஆகியோரின் பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக (18 - 11 - 1991) இன்று பிற்பகல் 2-00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

24/1, 1 ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[18816]

செல்லையா மாசிலாமணி

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான செல்லையா மாசிலாமணி 17-11-1991 இல் காலமாகிவிட்டார்.

இவர் செல்லையா - அபிராமிப்பிள்ளையின் அன்பு மகனும், இராசமணியின் அன்புக் கணவரும், குலராசா [லண்டன்], சரோஜினிதேவி [அவுஸ்திரேலியா], சிவராசா [மினிபஸ் சாரதி], ரஜினிதேவி, மாலினிதேவி, தர்மபாலன் [மஸ்கட் கொம்பனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், மனோகரன் [அவுஸ்திரேலியா], உதயணன் [இலங்கை போக்குவரத்துச் சபை], யோகீந்திரகுமார் [பிரபல வர்த்தகர்], சித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீபா, பிரபா, பிரதாப், பிரசாந்தி, மயூரன், நிருபன் ஆகியோரின் பாசமுள்ள பேரனும், குமாரசாமி, நடராசா, மதியாபரணம், துரைராசா, படைவீரசிங்கம், மகேஸ்வரி ஆகியோரின் சகோதரரும், பொன்னம்மா, காந்திமதி, சரஸ்வதிதேவி, பாலசுப்பிரமணியம், விக்னேஸ்வரராஜா, விஜயரத்தினம், மனோன்மணி, சிவமணி, தயாளமணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று காலை 9-00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. விஜயரத்தினம்
(மைத்துனர்)

உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(18818)

உதயன்

வந்துவிட்டது பட்டினி நிலை!

இதோ வருகிறது, அதோ வருகிறது என்று குடாநாட்டு மக்களைப் பயமுறுத்தி வந்த பட்டினி நிலை வந்தே விட்டது! ஆம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ள உணவுப் பங்கீட்டுத் திட்டத்துடன் பல குடும்பங்கள் பட்டினி கிடக்கும் நிலை உருவாகி உள்ளது!!

ஒரு கிலோ அரிசியை 26 ரூபாவாகவும், ஒரு கிலோ மாவை 23 ரூபாவாகவும், சீனியை 36 ரூபாவாகவும், பருப்பை 80 ரூபாவாகவும், தேயிலையை 130 ரூபாவாகவும் வாங்கக் கூடிய பண வசதி எத்தனை குடும்பங்களுக்கு உண்டு?

இதுவரை கூட்டுறவுச்சங்கங்களுக்குக் கொடுத்த பணத்தை விட இரண்டு மடங்கு விலை கொடுத்தே அத்தியாவசிய உணவுப் பொருள்களை வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து, கட்டுப்பாட்டு விலைக்கே, அத்தியாவசிய உணவுப் பொருள்களை வாங்குவதற்கு மக்களிடம் பணம் இருக்கவில்லை. அதற்கேற்ற வருமானம் பெரும்பான்மையான மக்களுக்கு இல்லை. நான்கு வாரங்களுக்கும் உரிய பங்கீட்டுப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு பணம் இல்லாமல் கஷ்டப்பட்ட குடும்பங்கள் பல.

அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை இராணுவ நடவடிக்கைகளால் குடாநாட்டு மக்களில் எண்பது சத வீதத்துக்கும் அதிகமானோர் தாம் செய்து வந்த தொழில்களை இழக்க வேண்டியதாயிற்று. அதனால் அவர்கள் எவ்வித வருமானமும் இல்லாமல் நிர்க்கதிக்கு ஆளாகி உள்ளனர்.

ஏதோ ஒரு வேலையைச் செய்து வருமானம் பெறுபவர்களால் கூட, இப்போதைய விலைவாசியில் உணவுப் பொருள்களைத்தானும் கொள்வனவு செய்யமுடியாத நிலை. குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை அதிகமாக உள்ளவர்கள் இப்போதே ஒரு நாளில் ஒரு வேளை மட்டுமே உண்கிறார்கள்,

மேலும் ஆராய்ந்து பார்த்தால், தென்னிலங்கையில் நிலவும் வாழ்க்கைச் செலவை விட, குடாநாட்டில் ஐந்து ஆறு மடங்கு உயர்வாகவே உள்ளது. ஆனால் குடாநாட்டு மக்களின் உற்பத்தியும், வருமானமும் பூச்சியம்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், யாழ்ப்பாண மாவட்ட மக்கள், அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டி இருப்பது பலரைப் பட்டினி போடும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

கட்டுப்பாட்டு விலைக்கு அன்றி அதனைவிட இரண்டு மடங்கு விலை கொடுத்தே உணவுப்பொருள்களை வாங்க முடியும் என்ற நிலை உருவாகி இருப்பதால், குடாநாட்டு மக்களில் ஆகக் குறைந்தது எண்பது சத வீதமானோர் பட்டினி நிலையை எதிர்நோக்குவர் என மதிப்பிடலாம்.

அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைகளைக் குறைப்பதற்கான சாத்தியம் ஏதாவது உண்டா என்று ஆராய்ந்து மறுபரிசீலனை செய்தால், மக்களுக்கு பெரிதும் உதவுவதாகவும், பட்டினிச்சாவுகளைத் தடுப்பதாகவும் அமையும் எனக் கருதுகிறோம்.

ஸ்தாபனரீதியான மாற்றம் இராணுவத்தில் தேவை!

புதிய தளபதி சொல்கிறார்

கொழும்பு, நவ. 18

முதலில் கிழக்கு மாகாணத்திலும், பின்னர் வடக்கு மாகாணத்திலும் தேர்தல்கள் நடத்தப்படும். இதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு ஏற்றவாறு இராணுவ நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும்.

இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தாம் பதவி ஏற்ற பின்னர் நடைபெற்ற வைபவம் ஒன்றில் வைத்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதியாகப் பதவி ஏற்றுள்ள 10 ஆவது இலங்கையரான சிசில் வைத்தியரத்னவை வரவேற்பதற்காக கொழும்பு இராணுவத் தலைமை அலுவலகத்தில் அணிவகுப்பு மரியாதை ஒன்று அளிக்கப்பட்டது.

அந்த வைபவத்தில் சிசில் வைத்தியரத்ன மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் காயம் அடையும் படையினருக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்படும். காயம் அடையும் அல்லது அங்கவீனம் அடையும் படையினரின் சேம நலனுக்கு மிகவும் முன்னுரிமை அளிக்கப்படும்.

செக்கோஸ்லேவாக்கியாவில் இருந்து ரி - 83 ராங்கிகளும், சீனாவில் இருந்து இராணுவ வாகனங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் மேலும் தீவிரமாக உழைப்பதற்கு ஸ்தாபன ரீதியான மாற்றங்கள் அவசியமானவை — என்றும் அவர் கூறினார்.

1985 ஆம், 86 ஆம் ஆண்டுகளில் தாம் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றி இருந்ததாகவும் —

இராணுவ முகாம்களுக்கு அருகில விடுதலைப் புலிகளின் பதுங்கு குழிகள் இருக்கக் கூடாது என்பதில் தாம் தீவிரமாக இருந்ததாகவும் —

தமது கடுமை காரணமாகவே அப்போது கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டதாகவும் — சிசில் வைத்தியரத்ன தமது பேச்சின் ஒரு கட்டத்தில் தெரிவித்தார். (அ-த)

64 படையினரின் அஸ்தியும் பங்கிடப்பட்டு கையளிப்பு!

உறவினர்கள் பொறுப்பேற்றனர்

கடந்த ஆண்டு ஜூன் மாதம் விடுதலைப் புலிகளுடனான யுத்தம் ஆரம்பமான பின்னர் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களில், அடையாளம் காணப்படாத நிலையில் தகனம் செய்யப்பட்ட 64 பேரின் அஸ்தியே 64 கலசங்களில் வைக்கப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த வைபவம் பொரளை ஜயரத்ன புளோறிஸ்ட் மண்டபத்தில் நடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

அஸ்தி அடங்கிய கலசங்களைப் பெற்றுக் கொண்ட உறவினர்கள் கனத்தை மயானத்துக்கு அவற்றை எடுத்துச் சென்று அங்கு அவற்றை சமயக்கிரியைகளுடன் அடக்கம் செய்தனர்.

இராணுவத் தளபதியாக இருந்து கூட்டுப்படைகளின் தளகர்த்தராக பதவி உயர்வுடன் தற்போது நியமனம் பெற்றுள்ள ஜெனரல் ஹமில்டன் வணசிங்கவும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டார்.

வடபகுதியில் கடந்த வருடம் ஜூன் மாதம் தொடக்கம் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான சண்டைகளில் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் அடையாளம் காணப்படாத சடலங்கள் அவ்வப்போது தகனம் செய்யப்பட்டு அஸ்தி சேகரித்து வைக்கப்பட்டு வந்தது. இந்த அஸ்தியே தற்போது 64 கலசங்களில் பங்கிடப்பட்டு, உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

பொரளை ஜயரத்ன புளோறிஸ்ட் மண்டபத்தில் இடம்பெற்ற அஸ்திக்கலச கையளிப்பு வைபவத்துக்கு மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தலைமை வகித்தார். [இ]

புலிகளின் பெயரில் பணம் பறித்த முஸ்லிம் குழுவினர்!

இராணுவ அதிகாரியும் கைது

கொழும்பு, நவ. 18

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிப்பதாகத் தெரிவித்து கொழும்பிலும் கிழக்கு மாகாணத்திலும் பணம் பறித்து வந்த முஸ்லிம் குழு ஒன்று பற்றிய விபரங்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

திருகோணமலை மாவட்டம், கிண்ணியாவில் அண்மையில் பெருமளவு நவீன ரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதை அடுத்து, கைதான நால்வரிடம் இருந்தே பரபரப்பான இத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நால்வரின் தகவல்களை அடுத்து கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் முஸ்லிம் இராணுவ அதிகாரி ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமான பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளதாவது:-

கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் தமிழ் தேசிய இராணுவத்திடம் இருந்து எடுக்கப்பட்டதாகவும் தமிழ் தேசிய இராணுவம் செயற்பட்ட காலத்தில், திருமலையில் களவு வேலைகளில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் முஸ்லிம் இராணுவ அதிகாரி ஒருவரே இந்த ஆயுதங்களை இக்குழுவினருக்கு வழங்கினார் என்றும்—

இந்தக் குற்றச்சாட்டின் பேரிலேயே முஸ்லிம் இராணுவ அதிகாரி கைதானார் என்றும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

சம்பந்தப்பட்ட முஸ்லிம் தீவிரவாத குழுவினர், ஜிஹாத் இயக்கத்துடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம் என்றும் [illegible] தெரி[illegible] [இ-10]

பத்மநாபா கொலைபற்றி விசாரிக்க

தமிழ் நாடு பொலீஸார் கொழும்பு வர உள்ளனர்?

சென்னை, நவ 18

தமிழ்நாடு பொலீஸ் கோஷ்டி ஒன்று கொழும்பு வருவதற்கு அனுமதி கோரி இருப்பதாக கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று கூறுகிறது.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் பத்மநாபாவும் மற்றும் 14 பேரும் கொலைப்பட்ட சம்பவம் தொடர்பான சில தகவல்களை இலங்கைப் பொலீஸாரிடம் பெறுவதே இவர்களது கொழும்பு விஜயத்தின் நோக்கம் என்றும் —

இவர்கள் பொட்டு அம்மான், டானியல்; திலீபன், காந்தன், ரமணன், குஞ்சன் அல்லது ராஜன் ஆகியோர் பற்றிய தகவல்களைப் பெற முயற்சிப்பர் என்றும் மேலும் பேசப்பட்டது. (இ-த)

கைதிகள் தப்பி ஓடியதன் விளைவு

வேலூர் சிறை அதிகாரிகள் தற்காலிக வேலைநீக்கம்

சென்னை, நவ 18

தமிழ்நாட்டில் ஆயுள் தண்டனை அறிவிக்கப்பட்டிருந்த இரு இலங்கையர்கள் உட்பட எண்மர் வேலூர் சிறையில் இருந்து தப்பிச் சென்றது தொடர்பாக ஓர் உதவிச் சிறை அதிகாரியும் 12 சிறைக் காவலர்களும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மாநில சிறைச்சாலைகளுக்கான இன்ஸ்பெக்டர் ஜெனரல் வைகுந் நடத்திய விசாரணை முடிவிலேயே மேற்கண்ட 13 பேரும் வேலையில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டனர்.

தப்பி ஓடிய இந்த எண்மரையும் கண்டுபிடிப்பதற்காக தமிழ்நாட்டில் தனியாக ஒரு விசேட பொலீஸ் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. (இ-த)

தமிழ் தேசிய மீட்புப்படை: 15 பேர் இதுவரை கைதாம்

சென்னை, நவ 18

தமிழ் தேசிய மீட்புப் படையைச் சேர்ந்த 15 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தமிழ்நாடு பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் இந்த அமைப்பு இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது

தமிழ் நாட்டில் இருந்து அத்தியாவசியப் பொருள்களையும் ஆயுதங்களையும் யாழ்ப்பாணத்துக்கு ஏற்றிச்செல்வதில் இவர்கள் விடுதலைப்புலிகளுக்கு உதவுகின்றனர் என்று தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. (இ-த)

கோபாலசாமியின் தம்பி தமிழகப் பொலீஸாரால் கைது

சென்னை, நவ. 18

தி. மு. க. எம். பியான வை. கோபாலசாமியின் இளைய சகோதரர் ரவிச்சந்திரன் கடந்த வெள்ளிக்கிழமை தமிழ்நாடு பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள ரவிச்சந்திரனின் வீட்டை பொலீஸார் முற்றுகையிட்டபோது அங்கு பத்து விடுதலைப் புலிகள் தீவிரவாதிகள் இருந்தனர் என்றும்—

அவர்களில் ஐவர் காயம் அடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபா மற்றும் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகத் தேடப்பட்டு வந்தபோது சயனைட் உட்கொண்டு மரணம் அடைந்த குண்டு சாந்தனுக்கு ரவிச்சந்திரன் புகலிடம் கொடுத்தார் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பாளையங்கோட்டையில் ரவிச்சந்திரனின் வீட்டைப் பொலீஸார் முற்றுகையிட்டபோது சிவந்தான் என்ற விடுதலைப் புலிகள் தீவிரவாதி தப்பிச்சென்று விட்டார் என்றும் கூறப்படுகிறது. [இ-த-10]

ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 18

பல வருடங்களாக செயற்படாதிருக்கும் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தைப் புனரமைத்து மீள இயங்கச் செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு தமிழீழ ஆய்வு நிறுவன [illegible] பணிமனை மண்டபத்தில் நடைபெறும். [த]

கொலைச் சந்தேக நபர்களை கண்டியில் சந்தித்தார் அனுரா

சிட்னி சமகே என்பவரின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கண்டியில் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களை திரு. அனுரா பண்டாரநாயக்கா அண்மையில் சென்று சந்தித்தார் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொலையுண்ட சிட்னி சமகே கடந்த பொதுத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்ட திரு. குணபால விதான சமகேயின் சகோதரர் ஆவார்.

சந்தேக நபர்களை திரு. பண்டாரநாயக்கா சந்தித்தது பற்றி திரு. குணபால விதான சமகே ஆட்சேபனை தெரிவித்துள்ளார். (ஒ-த)

பன்றிக்கு குறி; வயோதிபப் பெண் பலி!

பன்றிக்கு இலக்கு வைத்து சுட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிக் குண்டு, மரத்தில் மோதிச் சிதறியபோது அங்கு விறகு சேகரித்துக் கொண்டிருந்த வயோதிப மாது தலையில் காயமடைந்து, அவ்விடத்திலேயே மரணமானார்.

நேற்று பன்றிளம் முகமாலை அம்பளாவளைப் பகுதியில் நடந்த இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வேலாயுதம் சிவக்கொழுந்து [68 வயது] என்பவரே பலியானவர் ஆவார். (ஒ-117)

தமிழியல் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையினர் நடத்தும் ஆய்வரங்குத் தொடரில் நாளை மறுதினம் புதன்கிழமை "இடைச்சொல் பற்றிய மூன்று எடுகோள்கள்" என்னும் தலைப்பில் பண்டிதர் க. சச்சிதானந்தன் ஆய்வுரை நிகழ்த்துவார்.

பல்கலைக்கழக பொருளியல் அரங்கில் கலாநிதி இ. பாலசுந்தரம் தலைமையில் பி.ப. 2 மணிக்கு ஆய்வுரை ஆரம்பமாகும்.

பண்டிதர் சச்சிதானந்தன் இடைச்சொல் பற்றி ஆராய்ச்சி ஒன்றை மேற்கொண்டு நூல் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

மரண அறிவித்தல்

திருமதி சங்கரப்பிள்ளை மீனாட்சி

காரைநகர் புதுறோட்டைச் சேர்ந்த திருமதி சங்கரப்பிள்ளை மீனாட்சி காலமானார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு வட்டுக்கோட்டை நவீன சந்தை அருகாமையிலுள்ள இல்லத்தில் நடைபெறும்.

இவ்அறிவித்தலை யாவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:

திருமதி த. துரைராசா
[அதிபர். இலடடி,
காரைநகர்]

(இ/0906)

மங்களா..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மாநாட்டில் கலந்து கொள்ள திரு. மங்கள முனசிங்க அங்கு செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த மாநாடு முடிந்து கொழும்பு திரும்பியதும் அவர் யாழ்ப்பாணம் வருவதற்கு முயற்சிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம்—

விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்தும் தமது முயற்சியின் ஒரு கட்டமாக அமைச்சர் எஸ். தொண்டமான் டிசம்பர் முதல் வாரத்தில் யாழ் வரக்கூடும் என்று மற்றொரு கொழும்புச் செய்தி தெரிவித்தது. [உ-3-5]

விமான.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த அதிகாரி கூறினார்.

பிடிபட்ட கப்பல் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தது என்றும், இதன் பெயர் "தெவினோவ" என்றும் தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் இருந்த கைதான பத்துப் பேரில் தமிழ்நாட்டில் எந்தவித நடவடிக்கையிலும் இதற்குமுன் ஈடுபடாதவர்கள் எனக் கருதப்படும் நால்வர் சென்னை நகர உபசிறையில் வைக்கப்பட்டுள்ளனர். மிகுதி அறுவரும் தனியாக வைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்தக் கப்பல் தற்போது சென்னை துறைமுகத்தின் ஒரு ஒதுக்குப் புறத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கப்பலில் இருந்து கைப்பற்றப்பட்ட பொருள்கள் நீதிமன்றத்தில் சான்றுப் பொருள்களாக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மற்றும் கைது செய்யப்பட்டவர்களின் டயறிகளில் காணப்பட்ட 20 விலாசங்கள், தொலைபேசி இலக்கங்கள், மற்றும் வெளிநாட்டு விலாசங்கள் மத்திய புலனாய்வுப் பிரிவினர் வசம் உள்ளன.

இக்கப்பலைக் கைப்பற்றிய இந்திய கடற்படை அதிகாரியையும் மற்றும் அவரது குழுவினரையும் தமிழக ஆளுநர் நேரில் அழைத்து பாராட்டி உள்ளாராம்.

மேலும் இரு கப்பல்கள் புலிகளிடம் உள்ளனவாம்!

புதுடில்லி, நவ. 18

சர்வதேசக் கடல் மார்க்கமாக ஆயுதங்களை எடுத்து வருவதற்கு விடுதலைப் புலிகளிடம் மேலும் இரு கப்பல்கள் இருக்கின்றன என்று இந்தியாவில் இருந்து வெளிவரும் "பேட்றியட்" சஞ்சிகை தெரிவிக்கிறது.

ஆயுதங்களை எடுத்து வருவதற்கு விடுதலைப் புலிகள் இன்னும் கடல் மார்க்கத்தையே பயன்படுத்துகின்றனர் என்றும் இச் சஞ்சிகை தெரிவிக்கிறது. (த-இ)

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் ஒன்பது தமிழர் கைதாகினர்

யாழ்ப்பாணம், நவ. 18

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி முகாம் இராணுவத்தினரும், சமூக விரோதக் கும்பலொன்றைச் சேர்ந்தவர்களும் இணைந்து கடந்த வியாழக்கிழமை குருவில் கிராமத்தைச் சுற்றி வளைத்தனர்.

அங்கு ஒன்பதுபேர் கைதாகினர். அவர்கள் பெரும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் கடந்த 10 ஆம் திகதி செட்டிபாளையம் இராணுவத்தினரும் சமூக விரோதக் கும்பல் ஒன்றும் கூட்டாக கிரான் குளத்தைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய சமயம், அங்கு தப்பிராசா (27 வயது) என்னும் குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கைதாகும் தமிழர்கள், படையினரால் தாக்கப்பட்டு, சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

கொக்குவில் இந்துவில் இன்று ஆங்கில தினம்

யாழ்ப்பாணம், நவ. 18

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று ஆங்கில தினம் நடைபெறவுள்ளது. விழாவுக்கு யாழ். கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) திரு. துரை தியாகராசா கலந்து கொள்ளவுள்ளார். (ஒ)

ஜி. சி. ஈ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களையும் பூர்த்தி செய்துள்ளேன்.

"பரீட்சைக்குத் தேவையான காகிதாதிகள் கப்பலில் ஏற்றப்பட்டுள்ளன. அவை இந்த வார இறுதியில் யாழ்ப்பாணம் போய்ச்சேரும் என எதிர்பார்க்கிறேன்.

"வினாத்தாள்களை எடுத்துக்கொண்டு நான் யாழ் திரும்புவேன்" — இவ்வாறு கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

ஜி சி ஈ. [சாதாரணதர] பரீட்சை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில், 171 நிலையங்களில் நடத்த ஏற்பாடாகியுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

1990 டிசம்பரில் பரீட்சைக்குத் தோற்றத் தவறிய சுமார் 24 ஆயிரம் பரீட்சார்த்திகளுக்கும் பழைய பாடத் திட்டத்தின் கீழ், தனியாக வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு இந்தப் பரீட்சை தொடர்பான காகிதாதிகளை அனுப்பி வைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றும்—

புனர்வாழ்வு முகாம்களிலுள்ள பரீட்சார்த்திகளுக்கென 8 விசேட பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

டிசம்பர் 9 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நாடு முழுவதிலும் உள்ள 4 ஆயிரத்து 380 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறும். [உ-ஒ-3-10]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மாவீரர் தின விழா

வடமராட்சிக் கல்விக் கோட்டத்திற்கான மாவீரர் தின விழா எதிர்வரும் 21 ஆம் திகதி யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரி மண்டபத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். (த-118)

பத்திரிகை விற்போரும் அகப்பட்டனர்!

கொழும்பு, நவ. 18

கொழும்பில் நடக்கவிருந்த "சார்க்" மாநாட்டுக்காக பிச்சைக்காரர்கள் "ரிதிகம" கிராமத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டபோது, வேறு பலரும் அவர்களுடன் சேர்த்து அள்ளிக் கொண்டு போகப்பட்டனர்!

அவர்களில் பத்திரிகை விற்போர், நடைபாதை வியாபாரிகள், பஸ்ஸைத் தவறவிட்டு இரவில் நடைபாதையில் தங்கியவர்கள் என்று பல ரகத்தினரும் அடங்குவர்.

"ரிதிகம"வுக்குச் சென்ற பி.பி.ஸி செய்தியாளர் இவர்களில் பலரைப் பேட்டி கண்டு அவர்களின் அனுபவங்களை வெளியிட்டிருக்கிறார். (அ-10)

நரசிம்மராவ்.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அமேதி, தேனலி, கட்ச், தெற்கு தார்வார், நந்தேர் ஆகிய தொகுதிகளிலும் முன்னணியில் நின்றது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் அமேதி தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் கப்டன் சதீஸ சர்மா பாரதீய ஜனதா வேட்பாளரை விட 40 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று முன்னணியில் நின்றார்.

மத்தியப் பிரதேசம் பிதுர்ஷா தொகுதியிலும் உத்தரப் பிரதேசம் புலன்ஷார் தொகுதியிலும் பாரதீய ஜனதா முன்னணியில் நின்றது.

மேற்கு வங்காளத்தில் ஒரு தொகுதியில் இடதுசாரி ஆதரவுடன் போட்டியிட்ட போர்வேட் புளொக் வேட்பாளரும் —

உத்தரப் பிரதேசத்தில் ஒரு தொகுதியில் பி. எஸ். பி. தலைவர் கன்ஷிராமும் முன்னணியில் நின்றனர்.

சட்டசபைகளுக்கு நடந்த இடைத் தேர்தல்களிலும் இந்திரா காங்கிரஸ் கணிசமான வெற்றி பெற்றிருக்கிறது [உ-த]

சங்கீத ஆசிரியர்களுக்கு அழைப்பு

மாவீரர் வாரத்தின் போது தேசியக் கொடியை பாடசாலைகளில் ஏற்றும் வைபவத்தின் போது 'எங்கள் தாயவள் கொடியிது' என்ற கொடியேற்றக் கீதம் இசைக்கப்படவிருக்கின்றது. இக்கீதத்தை இசைப்பது தொடர்பாக ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு கல்வித் திணைக்களமும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை கோட்ட மட்டத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு சகல சங்கீத ஆசிரியர்களையும் சங்கீத கல்வி அதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளை கோரியுள்ளார். சங்கீத ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளில் கொடியேற்றப் பாடலை இசைப்பதற்குப் பொருத்தமான ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பயிற்சி நடக்கும் இடங்கள் பின்வருமாறு:-

யா/வைத்தீஸ்வரா வித்தியாலயம்
காலை 9.00 மணி — யாழ் கோட்டம்
மாலை 2.00 மணி — வேலணைக் கோட்டம்

யா/இராமநாதன் மகளிர் கல்லூரி
காலை 9-00 மணி — மருதனார்மடக் கோட்டம்

யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தி.
காலை 9-00 மணி — வடமராட்சிக் கோட்டம்

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
காலை 9-00 மணி — தென்மராட்சிக் கோட்டம்

யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
காலை 9-00 மணி — பண்டத்தரிப்புக் கோட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
442, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
18-11-91.

த. மகாசிவம்
பொதுச் செயலாளர்

[இ/0905]